(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
10 சைவசமய பாடப்பரீட்சை : 2024
தரம் பத்து



nselva.com

காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஆன்மாக்களுக்கான தனு, கரண புவனம், யோகம் என்பனவற்றைச் சிருஷ்டித்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) அருளல்
2. ''சித்தமும் செல்லாச் சேட்சியன்" என்று கூறியவர் யார்?
   1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
3. புற ஆசாரம் எதனோடு தொடர்புபட்டது?
   1) உள்ளம் 2) உடல் 3) ஆன்மா 4) இறைவன்
4. சுவாமி விபுலானந்தர் கூறும் இறைவன் உவக்கும் இன்மலர்களில் அடங்காதது எது?
   1) உள்ளக்கமலம் 2) கூப்பிய கை காந்தன்
   3) நாட்டவிழி நெய்தல் 4) அடியிணைக்கு வாய்த்த மலர்
5. நியமம் என்பதில் அடங்குவது எது?
   1) மனத்திருப்தி 2) வாய்மை 3) சொல்லாமை 4) தெய்வ சிந்தனை
6. சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை மூலம் உணர்த்தப்படும் விழுமியப்பண்பு
   1) அன்புடமை 2) பணிவுடமை 3) சீவகாருண்யம் 4) அடக்கமுடமை
7. நவீனயுகத்து அரிச்சந்திரன் எனப்போற்றப்படுபவர்.
   1) விபுலானந்தர் 2) ஆறுமுகநாவலர் 3) மகாத்மாகாந்தி 4) 12 திருவள்ளுவர்
8. பூர்ணிமாந்த முறை எதனை அடிப்படையாகக் கொண்டு காலக் கணிப்பு செய்யப்படுகிறது?
   1) சூரியன் 2) சந்திரன் 3) நட்சத்திரம் 4) பஞ்சாங்கம்
9. கறுப்பு எள்ளைப் பொட்டலமாகக் கட்டி நல்லெண்ணெய் விட்டு எரிந்து வழிபாடு செய்யும் கடவுள்.
   1) முருகன் 2) சிவன் 3) சனி 4) சண்டேசுவரர்
10. ''நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவேன்" என்ற மகா வாக்கியம் உள்ள நூல் எது?
    1) இராமாயணம் 2) மகாபாரதம் 3) திருக்குறள் 4) பகவத்கீதை
11. கன்னிக்கால் நாட்டுவதற்குப் பொருத்தமான மரம் எது?
    1) முள்முருங்கை 2) கொன்றை 3) வில்வம் 4) சீமைக்கிளுவை
12. இராவணனின் தேவியின் பெயர் யாது?
    1) மண்டோதரி 2) சூர்ப்பனகை 3) மங்கையற்கரசி 4) அநுசூயை
13. சடங்கு என்ற சொல்லின் பொருள் யாது?
    1) பூசை 2) வழிபாடு 3) செயல் 4) படையல்

14. அடியாரக்கெல்லாம் அடியார் எனத் தன்னைக் கூறிய நாயனார் யார்?
1) அப்பர் 2) சுந்தரர் 3) கண்ணப்பர் 4) திருநீலகண்டர்

15. அறிவித்தால் அறியும் பொருளில் அடங்காதது எது?
1) பசு 2) ஆன்மா 3) ஜீவன் 4) பதி

16. ''சேந்திர பாலர்" என்ற திருநாமத்தையுடைய தெய்வம் யார்?
1) சண்டேசுவரர் 2) வைரவர் 3) ஐயனார் 4) துவாரபாலகர்

17. மயில்வாகனருக்கு விபுலானந்தர் என்ற திருநாமத்தைச் சூட்டியவர் யார்?
1) சிவாநந்தர் 2) இராமகிருஷ்ணர்
3) விவேகானந்தர் 4) பிரபோதனசைத்தன்யர்

18. தமிழாகமம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் நூல் எது?
1) திருக்கோவையார் 2) திருக்குறள் 3) திருமந்திரம் 4) திருவாசகம்

19. மாணவரின் வினா, ஆசிரியரின் விடை எனும் அமைப்பில் அமைந்த தத்துவ நூல் எது?
1) இருபா இருப.்.து 2) சிவஞான சித்தியார்
3) சிவஞான போதம் 4) உண்மை விளக்கம்

20. திருவிழாக்களில் மௌனோற்சவம் குறிப்பது எது?
1) காத்தல் 2) அருளல் 3) அழித்தல் 4) மறைத்தல்

21. அறுபது அடி உயரங் கொண்ட கொடித்தம்பம் உடைய ஆலயம் எது?
1) கருதாவளைப்பிள்ளையார் 2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்
3) நல்லூர்க் கந்தசாமி கோயில் 4) நயினை நாகபூசணி அம்மன்

22. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதல் நிர்வாக சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்.
1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 2) விஜயரத்தினம்
3) சேர். பொன். இராமநாதன் 4) அருணாச்சலம்

23. நாடோறும் நியமமாக எந்த நேரத்தில் நித்திரை விட்டெழுதல் வேண்டும்?
1) சூரியன் உதிக்க 5 நாழிகைக்கு முன்
2) சூரியன் உதிக்க 4 நாழிகைக்கு முன்
3) சூரியன் உதிக்க 3 நாழிகைக்கு முன்
4) சூரியன் உதிக்க 2 நாழிகைக்கு முன்

24. திருக்கோவிலைச் சமீபித்தவுடன் யாது செய்ய வேண்டும்?
1) சிவலிங்கத்தை வணங்குதல் 2) தூலலிங்கத்தை வணங்குதல்
3) பலிபீடத்தை வணங்குதல் 4) கொடிக்கம்பத்தை வணங்குதல்

25. மருணீக்கியாரின் சூலை நோய் அவரை விட்டு அகன்ற தலம்.
1) திருவீழிமிழலை 2) திருவீரட்டானம் 3) திருபுன்கூர் 4) திருவாரூர்

26, 27 வரையான கேள்விகளுக்குக் கீழ்தரப்பட்ட அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை தருக?

A - அறம் செய விரும்பு
B - யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
C - உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
D - உணவை விடுத்து அல்லது சுருக்கி இறைவனை நினைத்தல்
E - மனத்துக்கண் மாசு இலனாதல்
F - நாவலர்
G - சீத்தலைச்சாத்தனார்
H - ஔவையார்
I - திருமூலர்
J - திருவள்ளுவர்

26. மணிமேகலை நூலுடன் தொடர்புடைய கூற்று.
1) BJ 2) CG 3) DH 4) EF

27. விரதத்தோடு தொடர்புடைய கூற்று.
1) DF 2) EH 3) CJ 4) BG

28, 29 வினாக்களுக்கும் கீழ்த்தரப்பட்ட அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

அ	A - கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் B - புன்னைச்சோலை பத்திரகாளி அம்மன் C - நல்லூர் கந்தசாமி கோவில் D - நயினை நாகபூசணி அம்மன்
ஆ	E - யமுனா ஏரி F - சித்தாமிர்த புட்கரணி G - முளாரி ஆறு H - திரிசுகர வேட்டை

இ	I - ஆனிமாதம் 6ம் நாள் J - ஆவணி வளர்பிறை 15ம் நாள் K - ஆனி பூரணை L - ஆவணி அமாவாசை

28. அமுதசுரபி என்னும் அன்னதான மடத்துடன் தொடர்புடையது எது?
    1) AHJ 2) BGJ 3) CEL 4) DFK
29, இவ்வாலயத்திற்கு கிழக்கே வெயிலுகந்த விநாயகர் ஆலயத்துடன் தொடர்புடையது.
    1) AFH 2) CGL 3) DEI 4) BGJ
30. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.
    1) ஒன்பது 2) பதினொன்று 3) பத்து 4) பன்னிரண்டு

(30 x 1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதானத்தில் எத்திசையில் தலைவைத்து நமஸ்காரம் பண்ண வேண்டும்?
2. சம்பந்தரின் பாடலுக்கு இசையமைத்த திருநீலகண்டப் பெரும்பாணரின் மனைவி பெயர் யாது?
3. செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே தவம் செய்தால் எய்த விரும்பியதை எய்தலாம் எனக்கூறியவர் யார்?
4. வசிட்ட முனிவரின் மனைவியின் பெயர் என்ன?
5. களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய தலவிருட்சம் எது?
6. மகோற்சவத்தில் ஐந்தொழில் சூர்ணோற்சவம் குறிப்பது எது?
7. இறைவன் தடத்தநிலையில் எத்தனை குணங்களைக் கொண்டவனாக விளங்குகின்றான்?
8. ''பால் நினைந்தூட்டும்'' எனும் திருவாசகம் பாடப்பட்ட தலம் எது?

(8 x 1 = 8 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் <u>இரண்டினை</u> அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. யாவர்க்கும் ஆம் இறைவற்கு ....." 2. "தண்ணளி வெண்குடை வேந்தன் ....."
3. "பாலுக்கு பாலகன் ....." 4. "அந்தணானன் ....."
5. "தந்தது உன் தன்னை கொண்டது ....."

(2x 7 = 14 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் <u>நான்கினை</u> எழுதுக.

1. "பொறுத்தல் இறப்பினை ....." 2. "ஒழுக்காறாகக் கொள்க ....."
3. "நடுவின்றி நன்பொருள் ....." 4. "அறன் கூறான் அல்ல ....."
5. "கொடுப்பது அழுக்கறுப்பான் ....."

(4x2 = 8 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "சைவசமயத்தை வளர்த்ததில் பெண் அடியார்களுக்கும் பெரும் பங்குண்டு"

அ. திலகவதியார் பிறந்த இடம், தந்தையார் பெயர் மற்றும் கணவனின் பெயரை தருக?

ஆ. திலகவதியார் உடன்கட்டை ஏறாமைக்கான காரணம் யாது?

இ. திலகவதியாரின் சகோதரனுக்கு ஏற்பட்ட நோய் யாது? அது எவ்வாறு நீங்கியது?

ஈ. திலகவதியாரின் சகோதரனுக்கு வழங்கப்படும் வேறு இரு பெயர்கள் என்ன?

(3 + 3 + 2 + 2 = 10 புள்ளிகள்**)**

2. "நான் செய்கிறேன் என்ற பற்றோடு செய்யும் வினைகளே பிறவிக்குக் காரணமாக அமைகின்றது"

அ. இறைவனின் இருவகை இலக்கணங்களும் எவை?

ஆ. ஆன்மாவைப் பீடிக்கும் மூவகை பாசங்களும் எவை?

இ. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?

ஈ. ஐந்தொழில்களும் எவை?

(2 + 3 + 3 + 2 = 10 புள்ளிகள்**)**

3. "குரு எமது கண்கண்டதெய்வம் என்பதில் ஐயமில்லை"

அ. குரு வழிபாட்டால் வீடுபேறடைந்த மூவரின் பெயரைத் தருக.

ஆ. இலிங்க வழிபாடு செய்து வீடுபேறடைந்த மூவரின் பெயரைத் தருக.

இ. குருவின் சிறப்புகள் இரண்டு தருக.

ஈ. சங்கம வழிபாடு என்றால் என்ன?

(3 + 3 + 2 + 2 = 10 புள்ளிகள்**)**

4. "ஆகமம் சாரா வழிபாட்டில் சடங்குகள் முக்கியத்துவம் பெறுகின்றது."

அ. ஆகமம் சாரா வழிபாட்டைக் குறிக்கும் வேறு மூன்று பெயர்களைத் தருக.

ஆ. கிராமிய தெய்வ வழிபாட்டில் குறிப்பிடப்படும் இரு காப்பிய நாயகிகளைக் குறிப்பிடுக.

இ. வைரவரை வணங்கப் பொருத்தமான விசேட தினங்கள் எவை?

ஈ. நாட்டார் இசைக்கருவிகள் மூன்று தருக.

(3 + 2 + 2 + 3 = 10 புள்ளிகள்**)**

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. சைவ விழுமியங்கள்
2. சைவ வித்தியா விருத்திச் சங்கம்
3. திருமுறைகள்
4. சந்தான குரவர்

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

(4 x 10 = 40 புள்ளிகள்**)**